# தமிழ் மொழி வளர்ச்சியில் இணைய ஊடகங்களின் பங்களிப்பு – ஒரு மதிப்பீடு

கா. இலட்சுமி[1*]

காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைத் தானே தகவமைத்துக் கொள்ளும் மொழிகள் தாம் உலகில் நிலைத்து நிற்கின்றன. காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத மொழிகள் அழிந்து விடுகின்றன. உலக மொழிகளில் உயர் மொழிகளாய்ப் போற்றப்படுவன செவ்வியல் மொழிகளாகும். அச்செவ்வியல் மொழிகளின் வரிசையில் காலத் தொன்மையும் வளர் புதுமையும் கொண்ட மொழியாய்த் தமிழ் விளங்குகிறது. தமிழ் மொழி கல்லெழுத்துத் தொடங்கிக் கணினி எழுத்தாகக் காலத்திற்கேற்ப வளர்ச்சியடைந்துள்ளது. உலகளவில் பயன்பாட்டு மொழியாகவும் பல்லூடக மொழியாகவும் தமிழை மற்றோர் உயர் தளத்திற்கு அழைத்துச் சென்ற பெருமை கணினித் தமிழுக்கு உண்டு. இருந்தமிழை ஈடில்லா மொழியாக்க இணைய ஊடகங்களின் வழி ஒருங்கிணைந்து உலகத் தமிழர்கள் உழைத்து வருகின்றனர். உலகத் தமிழர்களின் ஒருங்கிணைந்த அறிவின் பயனால் விளைந்த மின் இதழ்கள், மின் நூலகங்கள், மின் அகராதிகளான மின் ஊடகங்களின் வளர்ச்சியில் தமிழ் மொழியின் நிலைப்பாடு பற்றி ஆராய்ந்து உரைக்கும் நோக்கில்,"தமிழ் மொழி வளர்ச்சியில் இணைய ஊடகங்களின் பங்களிப்பு - ஒரு மதிப்பீடு" என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை ஆக்கம் பெற்றுள்ளது.

*திறவுச்சொற்கள்: மொழிகள், இதழ்கள், இணைய ஊடகம்*

[1]காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு, இந்தியா.
lakshmiravitamil@gmail.com.